//மின்னஞ்சல் மூலமாக//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.785/ஆ5/2024, நாள். 04.03.2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை சார்பாக நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் (எல்எஸ்டிஜி) – மாநில தொடர்பு அலுவலர் மற்றும் மாவட்ட தொடர்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டது – தற்போது வட்டார அளவில் மற்றும் பஞ்சாயத்து அளவில் தொடர்பு அலுவலர் நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ள விவரம் தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.0061158/பிடி1/இ3/2023, நாள். 26.02.2024

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து துறை, நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் (எல்எஸ்டிஜி) தொடர்பாக மாநில தொடர்பு அலுவலராக (State Level Nodel Officer) பள்ளிக் கல்வி இயக்கக இணை இயக்குநர் (நாட்டுநலப் பணித் திட்டம்) அவர்களை நியமனம் செய்தும், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக ( District Nodal Officer) அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களை நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இதன் தொடர்ச்சியாக, வட்டார அளவில் ஒருங்கிணைப்பாளர்களாக (Block Level Nodal Officer) வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு) மற்றும் பஞ்சாயத்து அளவில் ஒருங்கிணைப்பாளர்களாக (Panchayat Level Nodal Officer) அரசு தொடக்கப் பள்ளி, அரசு நடுநிலைப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களை பார்வையின் படி நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இணைப்பில் உள்ள வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு) மற்றும் தலைமையாசிரியர்களுக்கு மேற்கண்ட நியமன விவரத்தினை தெரிவித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ~~மாவட்ட~~ உதவி திட்ட அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. வட்டார அளவில் ஒருங்கிணைப்பாளர்கள் பெயர் பட்டியல் (Block Level Nodal Officer)
2. பஞ்சாயத்து அளவில் ஒருங்கிணைப்பாளர்கள் பெயர் பட்டியல் (Panchayat Level Nodal Officer)

2/4

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு
2. ~~மாவட்ட~~ உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
   காந்தி நகர், காட்பாடி, வேலூர் மாவட்டம்.
   (வட்டாரவள மேற்பார்வையாளருக்கு தெரிவிக்கும் பொருட்டு)

நகல்

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) மூலமாக
3. அரசு தொடக்க / நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
4. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (~~மாவட்ட~~ உதவி திட்ட அலுவலர் மூலமாக)